# காஸா கிராண்டே நிறுவன புதிய குடியிருப்பு துவக்கம்

கோவை, பிப்.10: கோவை அவினாசி ரோட்டில் இருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள காளப்பட்டி குரும்பாளையம் சாலையில் 'காஸா கிராண்டே' என்ற ரியல் எஸ்டேட் நிறுவனம் சார்பில் குடியிருப்புகள் கட்டப்பட உள்ளன.

இது குறித்து அதன் நிர்வாக இயக்குனர் அருண் குமார், நிர்வாக பங்குதாரர் செந்தில்குமார் ஆகியோர் கூறியதாவது: சென்னையின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனங்களில் ஒன்றான காஸா கிராண்டே கோவையில் தனி மற்றும் பாதி தனி சொகுசு வில்லா வீடு திட்டத்தை துவங்க உள்ளோம்.

அதன் படி 5 ஏக்கரில் கட்டப்பட உள்ள வீடுகள் 3 பெட்ரூம்களை கொண்ட 90 பாதி தனி வில்லா மற்றும் 4 பெட்ரூம்களை கொண்ட தனி வில்லாக்கள் உள்ளடக்கியது.

1600 முதல் 2000 சதுர அடி கொண்ட இந்த வீடுகள் ரூ.50 லட்சம் முதல் ரூ.70 வரை விற்கப்பட உள்ளன. இங்கு நீச்சல் குளத்துடன் கூடிய கிளப் ஹவுஸ், விருந்தினர் அறைகள், ஹெல்த் கிளப், உள்நாட்டு உள்கட்டமைப்பு கலை நயத்துடன் கட்டப்படுகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.